உ

சிவமயம்.

கணபதி தாசர் அருளிச்செய்த

# நெஞ்சறி விளக்கம்.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

எஸ். வேணுகோபால் நாயுடு அவர்கள்

விருப்பத்தின்படி



சென்னை திருவொற்றியூர்

நாகை. சரவண முதலியார் அவர்களது

கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1928

உ

சிவமயம்.

# நெஞ்சறிவிளக்கம்.

## விநாயகர் காப்பு.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்:

வஞ்சகமனத்தினாசை மாற்றியபெரியோர்தாளில்
கஞ்சமாமலரிட்டோதுங் கணபதிதாசனன்பால்
நெஞ்சறிவிளக்கஞான நீதி நானூறும்பாடக்
குஞ்சரமுகத்துமூலக் குருபரன்காப்பதாமே.

## நூல்வரலாறு.

பூமியிற்சௌந்தரப்பெண் புணர்ந்திடுநாகைநாதர்
நாமமெந்நாளுநாடி நவின்றுசெந்தமிழார் பாடிக்
காமமுமாசாபாசக் கண்டமுமகற்றிமேலாம் [சே.
ஓமெனுமெழுத்தைந்தாலேயுனையறிந்துணர்வாய்நெஞ்

தந்தைதாய்நிஜமுமல்ல ஜனங்களுநிஜமுமல்ல
மைந்தருநிஜமுமல்ல மனைவியுநிஜமுமல்ல
இந்தமெய்நிஜமுமல்ல வில்லறநிஜமுமல்ல
சுந்தரநாகைநாதர் இணையடிநிஜம்பார்நெஞ்சே. 2

காண்பது மழிந்துபோகும் காயமுமழிந்துபோகும், ஊண்பொருளழிந்துபோகும் முலகமுமழிந்துபோகும், பூண்பணிநாகைநாதர் பொற்பதமழியாதென்று, வீண்பொழுதினைப் போக்காமல் வெளிதனிலொளிபார் நெஞ்சே. 3

மனமெனும்பேயினாலே மாய்கையா மிருட்டரணாரூடச், சனனமெனு மாசா பாசந் தலை மிசை யேற்றிக் கொண்டு, கனமெனுஞ் சுமையை தூக்கிக் கவலையுற்றிட்டாய்நீயும், மனமெனும் நாகைநாதர் பதம்பணிந்தருள்சேர் நெஞ்சே. 4

இருவினைப் பகுதியாலே யெடுக்கதிங்குதேகந் தன்னை, மருவிய காலைசென்று மாயையிலழிந்தாய் நீதான் குருவினாற் குறையைமாத்துக் குண்டலி வழியே சென்றங், குருவினானாகைநாத ருண்மையை புணர்வாய் நெஞ்சே. 5

வானமதிலிரவியுந்தன் வயதெலாங்கொடுபோகின்றான், தானதை யறிந்திடாமற் றாணியி லிருப்பேனென்றே, ஊனமாமுடலைநம்பி யுண்மைகெட்டலைந் தாய்நீமெய்ஞ், ஞானமே பொருளாய் நாகை நாதரைத்தொழுவாய் நெஞ்சே. 6

எட்டுடனிரண்டுமாகியிருந்ததோரெழுத்தைக்காணார், விட்டதோர் குறையுங்காணார் விதியின்றன் விவரங்காணார், தொட்டதோர் குழியுங்காணார் சோதிமெய்ப்பொருளுங்காணார், கிட்டுமோ நாகைநாதா கிருபைதானுரைப்பாய் நெஞ்சே. 7

வஞ்சககடையரத்தில் வளர்வினைக் கொம்பிலேறிச், சஞ்சலமனக்குரங்கு தாவியேயலையநீதான், பஞ்ச பாதகங்கள் செய்து பாம்பின் வாய்த்தேரையானாய், நஞ்சமுதருந்துனாகை னாதரை வணங்கு நெஞ்சே. 8

உடலினை நிசமென்றெண்ணியுலகெலாமோடிவாடிக், கடன்மரக்கலப்பாய்க்கம்பக் காகம்போற் கலக்கமுற்றாய்த்திடமருள் குருவின்பாதஞ் சிக்கெனப்பிடித்துநின்றால், நடமிடுனாகைநாதர் நற்பதம் பணிவாய் நெஞ்சே. 9

வீட்டிருள் போகவென்றே விளக்கினை யேற்றிவைத்தால், வீட்டிருளெங்கேபோச்சு விளக்கொளியெங்கேபோச்சு, கூட்டினிடஞ்செய்யீசன் குறிப்பறியாமனீதான், நாட்டினிலலைந்தாய்னாகை நாதரைவணங்கு நெஞ்சே. 10

காட்டினின்மேவுகின்ற கனபூரமெல்லாம் பார்த்துவெட்டுவனெடுத்தலைந்துவிரும்பியகிருமிதன்னைக்

கூட்டிலே யடைத்துமந்தக் குளவிதனுருவாய்ச் செய்யும், நாட்டினில நீதா நாகைனாதரைவணங்கு நெஞ்சே

குளத்திலேகிடக்குமாமை குளக்கரைமுட்டையிட்டுக், குளத்துநீர்க்குள்ளிருந்து குறிப்பிடனினைக்கும்போது, களத்திலே புதைத்தமுட்டை கருவுருவானார்போலுன், உள்ளத்திலே னாகைனாத குருவறிந்துணர்வாய் நெஞ்சே. 12

மருவிய சிலந்திப்பூச்சி வயிற்றினினாலுண்டாக்கி உருவுடன் கூடுகட்டி புகந்ததிவிருக்குமாபோல், குருபானுனது கூட்டில் குடியிருப்பதுவைப் பார்த்துப் பெருவெளி னாகைநாதர் பெருமைகண் டருள்சேர் நெஞ்சே.

வாரணமுட்டையிட்டு வயிற்றில்வைத் தணைத்துக்கொண்டு, பூரண கூடுண்டாக்கிப் பொரித்திடுங் குஞ்சுபோலக், காரணகுருவைமூலக் கனல்விளக் கதனாற்கண்டு நாரணனறியா னாகைனாதரைப்பணிவாய்நெஞ்சே

பல்லினுள்ளிருக்கும் பூச்சிபொருந்த வெண்ணுரையுண்டாக்கி, மெல்லியதண்ணீர் வீட்டில் வெயிற்படா திருக்குமாபோல், சொல்லிலே னாகைநாதர் தோய்ந்திடாச் சூட்சங்கண்டாற்போல், கல்லிலே தெய்வமில்லைக கருததிலே தெய்ம நெஞ்சே. 15

தண்ணீரிலிருக்கும்மீன்க டண்ணீரிற் கருவைப்பித்துக், கண்ணினாற்பார்க்கும்போது கயலுருவானாற்போல கண்ணியகுருவைக்கண்டு நாதனல் லுருவைசசேர்த்து, விண்ணின் மேனாகைநாதர் மெல்லடிதெளிவாய் நெஞ்சே.

இலகிய ஊசிகாந்த மிரும்பினை யிழுப்பதேபோல், உலவியகுருபரன்று னென்னையாட்கொண்ட தன்மை, நலமுடனறிந்தநீகா னயனையறிந்திடாமல், நிலமிசையலைநதாய்னாகை லிங்கரை நினைப்பாய் நெஞ்சே. 17

சூரியசந்தம் பஞ்சசச் சுட்டுநெஞ்சுடைநீர் போல
சுரியவடிவமூலத்தின் குண்டலிக் கனலையூட்டி, மீயெ
விருக்குஞானத் தெளிவீடு தன்னிற்சென்றே, ஆரியனைக
னாத ரடியினை தொழுவாய் நெஞ்சே. 18

ஐவகைப் பூதந்தானு னூற்றுறு தத்துவங்களை
ட்டும், தெய்வமு முன்னிடத்திருக்க தேசத்திலலைந்
தாய் நீதான், பொய்வசத் தேசபந்தம் போக்கியிலக்கப்
பொருளை நோக்கி, ஐவரோரிடத்திற்கூடு மானந்தமறு
வாய் நெஞ்சே

ஊனமா முடலம் பொய்யென் றுணர்ந்து மெய்ய
றிவைக்கண்டு, தானவனான் போதேசர் குருபதத்தைச்
சேர்ந்தாய், வானதிலிரவிதிங்கள் வந்து போவதுவு க
ண்டால், ஞானவானைகநாதர் நடனமுங் காண்பாய் 20
நெஞ்சே

கிட்டுமோ ஞானயோகங்கிடைக்குமோ குருவின்
பாதம், கட்டுமோ மூலவாசி காணுமோ கபிலைவீடு, எ
ட்டுமோ நாகலிங்கமேற்றுமோ தீபசோதி, தட்டுமோ
பளிங்குமேடை தனையறியார்க்கு நெஞ்சே. 21

ஒருபாதந் தன்னை தூக்கியொருபாதந் தன்னைமா
ற்றி, இருபாதமாடுகின்ற வியல்பை நீயறிந்தாயானால்
குருபாதமென்று கூறுங் குறிப்புனக்குள்ளே யாச்சு,
வருபாதனைகனாதர் மலரடிகாண்பாய் நெஞ்சே.

நாடென்று நகரமென்று நலந்திகழ் வாழ்வதென்
றும், வீடென்றுமனையாளென்று மிக்கதோர் மைந்த
ரென்றும், மாடென்றுஞ் சம்பத்தென்றும் வாஞ்சை
கொண்டலைந்தா இந்தக் கூடொன்று மழிந்தாற்கூடக் 23
தொடருமோ கூடுநெஞ்சே.

ஏட்டிலேஎழுதுநூல்களெத்தனை படித்துநீதான்,
காட்டிலேஎரித்த திங்கள் கானலிற்சலம் போலாயை,
நாட்டிலே தெய்வமென்று நடந்தலையாம லுன்றன் கூ
ணிறைக நாதர் குறிப்பறிந்துணர்வாய் நெஞ்சே. 24

நற்பிடிசோறிறைத்த னையனென் றறிந்து கொண்டு சொற்படி பிள்ளைனேயோடுஞ் சுணங்கன்போற் குணமுண்டாகி, விற்பிடித்தடிக்கப்பெற்றவிமலனார் கமல பாதம், பிற்பிடித்து ஞானலிங்கநாதரைக் காண்பாய் நெஞ்சே.

விரகநாயகனைத்தேடி விரும்பிய மங்கைபோலக், குருவனுருபதேசத்தைக் குறிப்புட னிதமுந்தேடி, இரவுடன்பகலுமான விருபத நடனங் கண்டால், சிரமதி ஞானநாதர் சிலம்பொலி கேட்கு நெஞ்சே. 26

வாரணனயன்மால்ருத்திரன்மகேசுரன்சதாசிவன் றன், காரணமாறா வீட்டிற் கலந்தவரிருக்கு மப்பால் பூரணசிதாகாரந்தின்புனைமையுங்கண்டுபோற்றி, ஞானநாதரடியினைத் தொழுவாய் நெஞ்சே. 27

மோரிலே நீரை விட்டால் முறிந்திடுங் கொள்கை போலக், காரியகுருவைவிட்டுக்காரணகுருவைக்கண்டு சீரியசாலுநீர்போற் சேர்ந்திருவரு மென்றும், ஆரிய ஞானநாதரடிபணிந்தேத்து நெஞ்சே. 28

நித்திரைவந்தபோது நினைவுதானிருந்ததெங்கே
புத்திரர்தாமுமெங்கே புணர்ந்திடுமனைவியெங்கே
பத்திரபூசையெங்கே பலதொழில் செய்வதெங்கே
சிற்பரஞானநாதர் செயலினையறிவாய்நெஞ்சே.

வேடத்தைத்தரித்தாலென்ன வெண்பொடியணிந்தாலென்ன, நாடொத்து வாழ்ந்தாலென்ன நதிதலங் கண்டாலென்ன, தேடொணாத்தன ஞானநாதர் சிரடிசிக்கை தேர்ந்தே, ஓடந்தாமரையின்பூப்பேறுயர்ந்திடும்பெரியோர் நெஞ்சே. 30

கள்ளிடுசுணங்கன்போலச்சாஸ்திரம்படித்தாலென்ன, வெள்ளிபாது சிலைத்தாலிவேட்டியாய்த்தரித்தாலென்ன, உள்ளிருந்தாட்டிவிக்கு மொருவனையுருகித் தேடித், தெள்ளியஞானநாதர் செயல்காணார் மாந்தர் நெஞ்சே. 31

பளிங்குற்றகுளத்துநீரைப்பாசிதான்மறைத்தாற் போலக், களங்கற்ற புத்திதனைக்காமன் தான்மூடிக் கொண்டு, விளங்கத்தான் செய்வதில்லை மெய்யறி விளக்கையேற்றி, முழங்கத்தானுகை நாதர் முழுமொழி பகர்வாய் நெஞ்சே. 32

மண்ணதனையெடுத்து நீரால்வனையவுடன்பிசைந்து டண்டம், பண்ணியே கனலாற்சுட்டுப் பாண்டத கப பதுதான் விட்டே, அண்ணலர் வாய்வாகாசமடைந்த வெண்பூதக்கூட்டை, விண்ணமானுகைனுதர் விளையாட் டென்றறிவாய் நெஞ்சே. 33

கண்ணாடி தன்னிற்றோற்றுங் காரணவுருவம்போல், உண்ணாடிமூலாதாரத் துதித்தசற்குருவைக் கண்டு விண்ணாடி வெளியைப்பார்த்து விளக்கொளி மகிமைச்சேர்ந்தால்மண்ணுகுனுகைனுதார்வந்துனையாள்வார் நெஞ்சே. 34

உருவமுநிழலும்போல உகந்துபின்றொடருநாயன், பருவங்கண்டறிந்திடாமற் பருந்தின்காற்பட்சியானாய், புருவனை நடுவணைக் குட்பொருந்திய நடனங்கண்டால், குருபரனுகை நாதர் கூப்பிடவருவார் நெஞ்சே,

கணக்கில்லா வெழுவகையர்க்குட் கலந்துநெடுத்தவினுள். பிணக்கில்லா நரசென்மந்தான் பிறப்பதேயறி தென்றெண்ணிக் குணக்கில்லாகுண முண்டாகிச். சோதிலாஞானப்போற்றிக், கணக்கில்லானுகைனு தரிணையடி சேர்வாய் நெஞ்சே, 36

அரியதோர்நரஜன் மந்தா னவனியிற்பிறந்துவின்னுள், பெரியபேரின்ப ஞானம் பெறுவதே யறிதென் றெண்ணி, உரியவேதாந்தத்தன்மையுரைக்குமாசானைப் போற்றித், தெளிவொருனுனுகைநாதர் சீர்பதந் தேடு நெஞ்சே. 37

பசும்பொன்னி னுமமென்றிற் பணதிவேறுனற் போலே, விசுப்பெலாங் கலந்த சோதிவெவ்வேறதெ

யவமாகி, உடம்பி லேவர்க்குமாக்கு ஞாடம்பலன்ன
வன்னமை, கன்றுகண்டு ஞானிகளை வணங்காய்
நெஞ்சே. 38

விண்டவர் கண்டதில்லை விட்டோர் துறைமெய்
ஞ்ஞானம், கண்டவர் விண்டதில்லை கனகவம்பலத்தி
ன்காட்சி, அண்டர்கோடஞ்சை பீசனடி பிணைவாசியுச்
சி, மண்டலநாகைநாதர் வாழ்பதிவழிபார்நெஞ்சே.

காதடைக்கு மூக்குக் கண்ணாயிற் சிரங்கரந்து,
மாதடைசேனாடு மலர்பகமறிந்திடமல, வாதுசொற்றர்
க்க நூல்கள் வகைபலபடித்தாலென்ன, சாதுவாய்
நாகைநாதர் தாள்கண்டு தினைப்பார் நெஞ்சே. 40

தீபத்தை மலரென்றெண்ணிச் சென்றிடு விட்டில்
போலக், கோபத்தின் கனலில் வீழ்ந்து கொடியதோர்
பிறவிபெற்றாய், ஆபத்துவந்தாலுடனோடியவர்தாம்
வருவாரந்தச, சோபத்தைமறந்துநாகை லிங்கரைக்
தொழுவாய் நெஞ்சே. 41

மின்மினிப் பூச்சிதன்னுள் மெய்யொளி கண்டார்
போல, உன்மனதொடுங்கியேயுன் னுள்ளொளிகண்
டாற் பின்னைச், சென்மமுமில்லையந்தச், சிவத்துளே
சேர்வாய்நாளும் பொன்மகள் புகழுநாகைநாதரைப்
போற்று நெஞ்சே. 42

செம்பினிற்களிம்பு போலச் சீவனுஞ் சடமுங்
கூடி, நம்பினவுடலைக்கண்டு நல்லுயிர்வடிவங்காணாய்,
வெம்பிய நாமமாயைவிட்டுமெய்ப்பொருளைத்தேடிக்,
கும்பிய நாகைநாதர் கூத்தாடல் காண்பாய் நெஞ்சே.

இலவுகாத்திருந்த படசியேங்கியே பரக்குமா
போல், உலகமேபொருளாய் நம்பியொரு பலனற்றாய்
நீதான், தலைமையான் குருவை போற்றித் தாளிணை
வாசிகண்டால், நிலைமையாம் நாகைநாதர் நின்னிடை
நிற்பார் நெஞ்சே. 44

ஆத்துமலிங்கங்கண்டுளன்பெனுமலரைநன்ருய்ச்
சாத்தியே பிரணவத்தாற்றனிப்பெரு வட்டஞ் சூட்டி
போற்றியேதீபமூலவரிசுடர்விளங்கும்பார்த்துப்போ
ற்றியே னாகைநாதர் பொன்னடி பூசு நெஞ்சே. 45

சுக்கில விந்துதானுஞ் சுரோணிதக்கருவிற்கூடிப்
பக்குவக் குழவியாகிப் பையுளே யடைந்தபாவை, அக்
குவையதனைவிட்டிங் கவனியிற் பிறந்தசூட்சம், அக்
கினி நாகைநாதரமைந்ததென் றறிவாய்நெஞ்சே. 46

நீக்கமில்லாமலெங்கு நிறைந்தோர் வெளியையுன்
னுள், தாக்கியேயறிவினாலேதனைமறந்திருந்துபார்வை,
நோக்கியே நிஷ்டைகூடி நொடியரை நிமிஷம் வாங்கி,
தூக்கியே நாதநாகை நாதரைத்தொழுவாய் நெஞ்சே.

கடலென விளங்குப்வேத காரணகுருவைக்கண்
டுன், உடல் பொருளாவி மூன்று முதந்தவர்க்குதவி நீ
தான்திடமுடன் பூர்த்தியாகி செந்தூசிற்பாத்திற்சேர்
த்து, நடமிடும்வாசி நாகை நாதரை நாடுநெஞ்சே. 48

நாசியினுனியின்மீது நடனமே செய்யுந்தேசி, வா
சிவாவென் றவுன்னுள் வாங்கியேமௌனமுற்று, கா
சிமா நதியுந்தில்லைக் கனகவம்பலமுங் கண்டு, பூசுத்து
நாகைநாதர் பொன்னடிவணங்குநெஞ்சே. 49

தாவுநல் லுதயகாலந் தபனன்றேரெழும்பக்கண்டு
கூவுமாக்குக்கிடங்கட்கூப்பிடுங்காட்டிற்கம்பு
பேவியேயீயுமந்தமெய்யறிவறிந்தாயானால்
மூவர்கோனாகைநாதர் முன்வந்துநிற்பார்நெஞ்சே 50

மங்கையர்மீதிலாசை வைத்திந்தவையமீதில், சங்
கையில்லாத்துன்பச் சாகரந்தனிலே வீழ்ந்தாய், நங்
கைமேல்வைத்தபாச நாயன்மேல் வைத்துநீயும், செங்
கையானாகைநாதர் சீர்பதந்தொழுவாய் நெஞ்சே 51

அன்றிலும்பேடுபோலவடிமையுங்குருவுங்கூடிக்,
கொண்டிருந்தடி மூலத்திற குதித்தெழுவாசியாடக், க

ண்டிமையா நாட்டக் கருணையால்வெளியேறிப், பண்
டிருணைக நாதலிங்கரைப் பணிவாய் நெஞ்சே 52

குலங்கெட்டுப் பாசங்கெட்டுக் கோத்திரமேசங்
கெட்டு, மலங்கெட்டுக் கோபங்கெட்டு மங்கையராசை
கெட்டுத் தலங்கெட்டுத தானுங்கெட்டுத் தனைகுளே
வெறும்பாழாக்கிப், பலங்கெட்டு நாகைநாதர் பதங்
கொள்வார் பெரியோர் நெஞ்சே 53

ஓமென்னும் பிரணவத்தருதித் தலைவந்தொழுத்து
மாகி, ஆமெனுமகார பீடத்த ர்ந்தடுவ சிகண்டு, ஊ
மெனு மௌனமுற்றேயூரி மதிப்பாலுண்டு. தாமெ
னுணைகனாதர் தாண்டவம்பார்ப்பாய் நெஞ்சே 54

அலைதனிற்றுரும்புபோலு மாலைவாய்க் கரும்பு
போலும், வலைதனின் மானைப்போலு மயங்கினைங்கலை
த்தாய் நீதான் உலைதனின் மெழுகைப்போலு முருகி
மெய்ப்பொருளையுன்னி, நிலைதனினின்று நாகைலிங்க
ரைக் காண்பாய் நெஞ்சே. 55

பொறிவழியலைந்துமீளுப் புலன்களையடக்கிஞான
அறிவெனும் விழியினாலே யம்பரவெளியைப்பார்த்து
உரிதனிலிருக்குங்களை யுண்டுதற்போகமிட்டு, நெறி
தருணைக நாதர் நிலைமை கண்டறிவாய் நெஞ்சே 56

ஆயாதநூல் களெல்லாமாய்ந்துநீ பார்த்துங்கா
மத்தீயான குழியில்வீழ்ந்து சென்னமுற்றலைங்காயுன்
னின், காயாதபாலையுண்டு கனகவம பலதலைதகக்கண்டு
மாயாமனுணைகநாதர் மலரடி வணங்குநெஞ்சே. 57

ஆதாரமாறுந்தாண்டியைம்பூத வடிவந்தாண்டி,
மீதானவெளியுந்தாண்டி விளங்கியபரந்தன் கூத்தை நீ
தானுமறிந்து கொண்டு நின்மலவடிவமாகி, வேதாந்த
ணுணைகநாதர் மெல்லடி வெளிபார் நெஞ்சே 58

பார்த்திடு திசைகளெங்கும் பராபர வெளிதான்
கூடிச், சேர்த்திடு மடமை ஞான குருவினையறிந்து
கொண்டு, பேர்த்திடுமிமையா நாட்டதனிருந்து பெரி

ன்பவெள்ளம், வாரத்திபமூழ்கினாகைலிங்கரைவணங்கு நெஞ்சே. 59

சச்சிதானந்தமான சற்குரு பதத்தைப் போற்றிச், கச்சிமா நகரமூலக் கனல்விளக்கதனையேற்றி, உச்சிமேல்வைத்துப் பார்வை யுணர்வினால் வெளியிலுலவித், தச்சிலாவீட்டிநாகைலிங்கரை தழுவுநெஞ்சே.

காரின்ப மூலையாளோடு மன்றிலே நடஞ்செய் வோனைப் பேரின்ப வீட்டைக்கண்டு பிரணவ விளக்கை யேற்றிச் சேரின்ப வெளியில் வாசித்திருவிளையாடல் பார்த்தால், ஓரின்பனாகைநாதர்க் குகந்துவந்துரைப்பார் நெஞ்சே. 61

நாயனை யறிந்திடா மனுவென்று மாண்மையபாலே, ஆயவில்லாதகாலி யாகிநீடலையதுர்றாய், காயமே கோயிலாகக்கலந்திருந்தவனைக்கண்டு, மாயையானா வாழ்வுநாகை நாதரைவணங்கு நெஞ்சே. 62

உருப்படுங்கல்லுஞ் செம்பும் உண்மையாய்த்தெய்வமென்றே, மருப்புனை மலரைச்சூட்டி மணியாட்டித் தூபங்காட்டி, விருப்ப முற்றலைந்தாயந்த வினைமயல் விட்டுநின்னுள, இருப்பவனாகைநாதரிணையடி பூசிநெஞ்சே. 63

உனைவிடவேறே தெய்வ முண்டென வுலகிற்றேடும், நினைவதேதெய்வமாகி நீகண்டு நின்றாயானால் செனன மாயபிறவிபோகுஞ் சிவத்துளே சேர்க்குமெங்கோன், மனமகிழ் வயசிநாகைநாதரை தாள்வணங்கு நெஞ்சே. 64

ஆசையாம்பாசமாயையறிவதைமயங்கியுன்னுள் ஈசனைத்தேடொட்டாம லிருக்குமெவ்விருளைப்போக்கிக, கோசயாகுறிவை ஞேசகிக்குருபரன் வடிவைக் கண்டு, வாசமாயலரானார் னைசனுதலை வணங்குநெஞ்சே. 65

கன்றதைத் தேடுங்காணுங் காலியைப் போலே
யுன்னுள், நின்ற பேரொளியைக் கண்டு நினைவெறு
மறிவாற்றெய்வம், ஒன்றெனக் கண்டாயானு லுமைய
வளுடனே தில்லை, மன்றினுளாடு னாகை நாதர் முன்
வருவாய் நெஞ்சே. 66

மடைவாயிற் பட்சிபோலே மனந்தனை யடக்கி
விடையேறுமீசன்பாதம் விரும்பிய பெரியோர் பின்
னே, தடையறத்திருந்துஞான சாதனம்பெற்று நீதா
ன், புடைசூழநாகைநாதர் பொன்னடிபோற்றி நெஞ்
சே. 67

இரமெனுங் குகையினுள்ளே சிவகயிலாயமன்றில்
அரனுடமையுவாசியாடல்தான்செய்வரென்று, பரம
மெஞ்ஞான நூல்கள் பகர்வதையறிந்து, வரமிகுனாகை
நாதர் மலரடிவணங்கு நெஞ்சே. 69

கடமதிநிறைந்துநின்ற கனவொளிபோலே வுன்
றன், செடமதி னிறைந்துநின்ற சிவனையறிவார்கண்டு,
திடமிகுசிவகாட்சி தரிசிக்கசீவன்முக்தி, இடமரு நா
கை நாதரிணையடி யுணர்வாய்நெஞ்சே. 70

மெய்யாநல்விளங்குஞ்சோதிவெளிதனையறிவானு
ன்னி, ஐயமில்லாமற்காண்போ ரவரின்ப முத்தரெ
ன்று, துய்யமெஞ்ஞான நூல்கள் சொல்வதாற் பாத்
நோக்கிச், செய்யதாள் வாசிநாகை லிங்கரைத் தெரிசி
நெஞ்சே. 71

முந்தின பிறப்புவந்த முன்மையு மறியாயிப்பால்
பிந்தினபிறப்புவந்த பெருமையுமறியாய் நீதான், அந்
தரப்பட்சி போலே வலைகின்றய கத்துளேமுச், சந்தி
யை யறிந்துனாகை னாதரைச்சார்வாய் நெஞ்சே. 71

காகத்தின்கண்ணிரண்டிற் காண்பதுங் கண்ணொ
ன்றேபோல், தேகத்தினறிவின் கண்ணைச் திடமுட
னறிந்து கொண்டு, மோகத்தின் கனவில்வீழா முனை
சுழிவாசி பார்த்தால், ஏகாந்தநாகை நாத ரிணையடி
சார்வாய் நெஞ்சே. 72

ஒட்டிலேபட்டபட்சி உழல்கின்றநெறி போலா சைக்காட்டிலே மயங்கிமாறுக் கவலையுற்றலேந்தாய் நீ தான்நேட்டிலேயோடுவாசிநிலைமையாய்நிறுத்திமேரு வேட்டிலேஞகைநாதர் வாழ்பதியறியாய் நெஞ்சே.

ஆலைவாய்க் கரும்புபோலு மரவின்வாய்த் தே ரைபோலும், பூனைவா யெலியைப்போலும் புவியினை ந்தலேந்தாய்ஞானத், தேனைவாயருந்திமுத்தி சேர்ந்தி டச் சிவத்தைநோக்கி, ஊனுளே ஞகைநாத ருற்றிட மறவாய் நெஞ்சே. 74

மித்திரகுருக்கள் சொல்லைமெய்யென்று கல்லை வைத்துப், பத்திர புட்பஞ்சாத்திப் பணிந்திடும் பா வை நீதான், சித்திரைபதுமைபோலுஞ் செய்பதொழி லொடுங்கி நின்று, புத்தியாய் நாகைநாதர் பொன்னடி போற்று நெஞ்சே. 75

உப்பொடு புளிப்புங்கைப்பு முணர்விஞவறிந்து நீ தான், எப்போது முனக்குஞயனிருப்பிட மறியாதெ ன்னே, முப்போதுங் குருவைபோற்றி முனைசுழிவாசி பார்த்தால், அப்போது நாகைநாதரடி யிணையறியாய் நெஞ்சே. 76

படிக்கவு நாவிருக்கப் பணியவுஞ் சிரமிருக்கப் பிடிக்கவுங்கரமிருக்கப் பேணவுங்குருவிருக்க, நடிக்க வுந்தாளிருக்க நாடவுங்கண்ணிருக்க இடுக்கமுற்றலேந் தாய் ஞகைநா தரையிறைஞ்சு நெஞ்சே. 77

அருவிருவில்லாாய ன ஞுவினுக்கணுவாய் நின் றும், வருபலவுயிர்கட்கெல்லாம் வடிவேறுன் தன்மை ஒருவருமறியார் நல்லோ ருருதியாலறிவார் ஞான, குருபர ஞகைநாதர் குறிப்பறிந்துணர்வாய் நெஞ்சே.

ஆண்டொருநூறுகற்பமௌஷதமூவிரண்டு, நீண் டதோர் காயசித்தி நெடுநாளைக்கிருந்த பேரும், மா ண்டுதான் போவரல்லான் வைகத்திருப்பாருமுண் டோ, நீண்டொஞஞகைநாதர் சீர்பதந்தேடு நெஞ்சே

பொருடனைத் தேடிப்பாரிற் புதைக்கின்ற புத்தி போன்மை, யருடனை நிதமுந்தேடி யரனடியதனில் வைத்தால், இருடனையகற்றுஞ் சோதியெம்பிரான் முன்னேவந்தான், மருடனை மாற்றினாகை நாதரை வணங்கு நெஞ்சே. 80

ஆண்டியின் வேடந்தானு மறிவுடனெடுத்திடாமல், தூண்டிலின் மீனைப் போலத்துள்ளி வீழ்ந்தலைந் தாய்நீதான் வேண்டிய போதுநாயன் மெல்லடி வெளித்தாய்தோன்றும், தாண்டியவாசினாகை நாதரைத் தொழுவாய்நெஞ்சே. 81

சேத்திலே நுழைந்திருந்த சிறுபிள்ளைப் பூச்சி போலும்,நேற்றிலேநுழைந்திருந்தநேர்மையாம்கழற்சி போலும், மாற்று பேருலகினல்நேரார் மருவிரிமருவார் சித்தர், தேற்றிபேனாகைநாத ரிணைபடி வைப்பாய் நெஞ்சே. 82

நாடகப் பெண்ணையாட்டு நட்டுவன்போலேயுன் றன் கூடகச்சடத்தையாட்டுங் குருவையேயறிந்திடாமன், மூடகமானாய்ஞான முதல்வனை யறிவாற்றேடி, ஆடக நாகைநாத ரடியினை பணிவாய்நெஞ்சே 83

சத்தியுஞ் சிவமுமாகித் தாண்டவமாடும்வாசிசத்திய மூலநாடிச் சுழிமுனைக்கம்பத்துள்ளே, புத்தியைச் செலுத்திமேலாம் பொருடனை யெடுக்கவல்லார் யக்திசெய்நாகைநாதர் பதிதனைப்பார்ப்பாய் நெஞ்சே

நாட்டமாமறிவின கண்ணா ணையனை பருகிப்பார்த்துத் தேட்டமாக் கருணைபெற்ற சிவனடியார் கடங்கள், கூட்டமாம் பரத்திற் சென்று குருபணி விடையுஞ்செய்து. கோட்டமா நாகைநாத ரருடர வருவாய் நெஞ்சே. 85

காலனையுதைத்தநாதன் கரலெனும்வாசிதானை,
ஞாலகன் மனையிற்கண்டு முப்பதி முப்பாழ்தாண்டிப்
பாலமு தருந்தமேலாம் பராபரைவாதம் போற்றி
மாலயனறியாநாகை நாதரைவணங்குநெஞ்சே 86

கடுமையாம் தட்டிலேறிக் கயிறோடு சூலமேந்திக்
கொடுமையாங்காலன்வந்து கொண்டுபோமுன்னேநீ
தான் அடுமையாயயன்பாதத்தை யனுதின மறவாதே
த்தில், நெடுமையானாகைநாதர் நிலைமைகண்டறிவாய்
நெஞ்சே. 87

அரகராசிவசிவாவென் றனுதினமறவதேகத்திற்
சிரசுகைலாயவீட்டிற்சிவனை நீயறிந்துதேடி, மரகத
வல்லிபங்கன்வந்துமுன்காட்சிகல்கிப்,பரகதிகொடுக்க
னாகைநாதரைப்பணிவாய்நெஞ்சே. 88

நடக்கிலும் வாசிப்பாரு நாட்டமும் வாசிப்பாரு,
முடக்கிலும் வாசிப்பாரு முனைசுழி வாசிப்பாரு, மட
க்கிலும்வாசிப்பாரு மறியிலும் வாசிப்பாரு திடக்குனா
நாகைநாதர் திருநடனஞ்செய்வார்நெஞ்சே. 89

போனனாள் வீணாய்ப்போனாற் புதியநாள்கெடவி
டாமல், ஞானநாளிதுதானென்று நாடெங்கும் குரு
வைப்போற்றி, வானநாளகத்திற்சென்னிவழிகண்டு
மதிப்பாலூறும், தேனைநன் கருத்தினாகை லிங்கரைத்
தெரிசிநெஞ்சே. 90

தாராதர மெல்லாந்தானாய்த் தாபர சங்கமெங்கும்
நிராமயமாகக்கோத்து நின்றபேதார் பொருளாமந்தப்
பராபரவடிவங்கொண்டுபரத்துளேமடக்கிமேலாம்புரா
தனமூர்த்தினாகை லிங்கரைபோற்றுநெஞ்சே. 91

மாணிக்கவாசகர்க்கு மகிழ்பரஞ்சுந்தரர்க்கும், ஆ
ணிப்பொன் றிருமூவர்க்கு மறுபத்துமூவருக்கும், பே
ணிக்கொள் பெரியோருக்குப் பேயருள் சிவனுன்னுள்,
தோணக்கண்டிருந்து னாகைலிங்கரைத் தொழுவாய்
நெஞ்சே 92

மருத்துவமடைந்தநெஞ்சேமணமாயைகொண்ட
நெஞ்சே, பகுத்தறிவில்லா நெஞ்சே பலவினைவானநெ
ஞ்சே, மிகுத்திடுகாமநெஞ்சேமெய்ப்பொருளறியாநெ
ஞ்சே, செகத்தினாகைநாதர் சீர்பதந்தேடு நெஞ்சே, 93

காலதுமேலதாகக்கனியுண்ணும்வவ்வால்போல, மூலநல்வாசியோடு முறைமையையறிவார்கண்டு, சீல மெஞ்ஞானபோத சிவயோகந்தன்னைப் பார்த்து ஞா னமேனாகைநாதர் நடனமுங்காண்பாய்நெஞ்சே. 94

உறக்கமும் விழிப்பும்போலவுடல்பிறந்திருக்குந் தன்மை, சிறக்கவேயறிந்துமிந்தச்செகவாழ்வைமெய் யென்றெண்ணித், அறங்குதுமென்பார்ச் சொல்லைக் குறிப்புடம்பலாமோ, மறக்கொணானாகை நாதர் மல ரடி வணங்கு நெஞ்சே. 95

எத்தனை புத்திசொல்லியெடுத்தெடுத்துரைத்தநீ தான்,பித்தனைபோலேயோடிப்பிரவிசாகரந்தில்விழ்ந் தாய், முத்தமிழ் நாகைநாதர் முண்டகமலர்தாள்போ ற்றி சத்தமுன்னுடன்வீற்றேய்ந்துந்தலந்தனைப்பார்ப் பாய்நெஞ்சே. 96

சுவர்தலைபூனைபோலச்சுற்றியபிரவிதீரத், தவத்தி னுக்குருவமான சற்குருதாளைபோற்றிச், சிவத்துடன் கலந்துமேலச்சிதம்பரம்வழியே சென்றங், கெவர்க்கு மேலானனாகை நாதரைவணங்கு நெஞ்சே. 97

அலைவாரிற் பூடுபோலுமானைவாய்க்கவளம்போ லும், வலைவாயின் மிருகம்போலு; மயங்கினைந்தலைந் தாய் நீதான், உலைவாயின் மெழுகைப்போல வுருக்கி மெய்ப்பொருளையுன்னிப், பலகாலுமேத்தினாகை லிங் கரைப்பணிவாய் நெஞ்சே.

மூலமாநகரமீதின் மூளைத்தெழுஞ்சுடரைக்கண்டு காலதீமேலே யேற்றிக்கபாலத்தேனமுதருந்தி, வே லமரமதுவேயுண்டு குருபதந்தன்னிற் சேர்ந்து, வால சுந்தரியர்னாகை லிங்கரைவணங்குநெஞ்சே 98

இறந்திடுமிருபத்தோரா யிரத்தாறுநூறுபேரும் இறந்திடு மிச்சாயப்போனா லீசனைக்காண்பதென்னாள் மறந்திடாதறிவான்மூலவாசியைப்பேலேயேற்றிச், சிற ந்தசற்பரததுனாகை லிங்கரைதரிசி நெஞ்சே. 100

கதிதருமூலாதார கணபதிதாசன் சொன்ன, நிதிமணி மாலைபன நெஞ்சறிவிளக்நூறும், துதிசெயுமறிவோர் ஞானசோதியின் வடிவமாக, மதியணி நாகைநாதர் மலர்பதம்பொற்றிவாழ்வார்.

நித்தியப்பொருளதான நெஞ்சறிவிளக்கநூறும், பத்தியாய்மனதிலெண்ணிப் படித்ததன் பயன்காண் போர்கள், முற்றிமெஞ்ஞானம்பெற்று மூவர்க்கு முதல்வராகிச், சத்தியுஞ் சிவமுந்தோன்றுந் தற்பரமத
னுட்சாவார். 102

கனகமார்மணிசேர்மூல கணபதிதாசனாக, நினை விலவறிகள்செப்பு நெஞ்சறிவிளக்கநூறும், வினவியே படிப்போர்கேட்போர் வினையெலாமகன்றுமெய்யும், மனமெனு மோட்சநாலாம் பதம், பெற்றுப்பதத்துள்
வழ்வாரார். 10?

நெஞ்சறிவிளக்கம் முற்றிற்று.

# ஜெகஜாலப் புரட்டன் கதை.

இப்பகரினில் விளங்கும் செப்பரியநாவலர்களை வாசிக்கும் நேயர்காள் உங்கள் முன்னிலையில் சொல்லவந்ததோர் எமது ஜெகஜாலப்புரட்டன் கதையை மயாஜாலம், கண்கட்டுஜாலம், மாங்கிரீகஜாலபுத்தாம் போஃறஜாலக்கதைகளென்றுஎண்ணி விடாதீர்கள் ஜெகஜாலப்புரட்டன் உலகப்புரட்டன் களிருவர் வடதேசத்தில் அவதரித்து தென் தேசத்திற்குவந்து ஆங்குள்ள நிபுணத்துவம்பொருந்திய மன்னவன் குடிஜனங்கள் தாசி வேசிகள் அனைவரையும் பேராசைநிராசையாகும்படி அவ்வூரார்பொருள் பூஸ்திதிகளனைத்தையும் வசாகைங்கிரிய வார்த்தைகளாடி கேட்டவர்அக்கதைக்குநிகர் விகடகதைளெல்லாம் முன்னுக்குவாராதென்றுசொல்ல முடியாசிரிப்பை அடை… பது திண்ணம். இ… 4.

# இகபரஞான சாகரத்திரட்டு.

மோக்ஷமார்க்கத்திற்கேற்றபொக்கிஷம்

இது எல்லாருக்கும் அவசியமான ஒரு சிறந்த நூல் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாத நல்லொழுக்கத்தைபோதித்து ஞானமடையச் செய்விக்க வல்ல தன்மை பொருந்திய நமது மூதோர்களாகிய தாயுமானவர், பட்டணத்தார், திருவள்ளுவர், ஔவை நாயன்மார், ஆழ்வாராதியர், பிர்மஞானர், வேமன்ன, நந்தனார், பாம்பாட்டிசித்தர், குதம்பைசித்தர், சிவவாக்கியர், முதலியோர்களால் அருளிச்செய்துள்ள பலநூல்களினின்று சில முக்கிய விஷயங்களை இதிற் திரட்டியுள்ளன இவற்றை மனனஞ்செய்வதால் யாவரும் பாவச் செயல்களை அறவேவிடுத்து புண்ணியச் செயல்களை அறவேவிடுத்து புண்ணியச் செயல்களை மேற்கொண்டு இகபரபேற்றினை யடைந்துய்யுமாறு லோகபோ காரமாக இப்புத்தகம் வெளியிடப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இப்புத்தகம் அவசியம் இருக்கத்தக்கதாகும். இதன் விலை அணா 8.

பத்துஅவதாரப்படங்களும் அஷ்டோத்திரமும் அடங்கிய

# தசாவதாரத்தியானம்.

ஸ்ரீமகாவிஷ்ணு

இதில் ஒவ்வொரு அவதாரங்களுக்கு பாட்டுகளும் அதனபின் அவதாரத்தினுடைய வரலாறும் ஸ்ரீமகா விஷ்ணு ஆராதனக்கிரமங்களும் அஷ்டோத்திரமும் இதில அடங்கி இருக்கின்றன இதைஎப்போதும் தியானம் செய்யும் பொருட்டாசுபாக்கெட்சையில் கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு இருக்கிறது. இதன் விலை அணா 4

---

எமது விலாசம்:--

டி ஆர். கிருஷ்ணா அண்டு கோ,

திருவொற்றியூர் போஸ்டு மதறாஸ்.

# விளம்பரம்.

எமது புஸ்தகசாலையில் தேவநாகரம், கிரந்தம், தெலுங்கு இங்கிலீஷ் முதலிய பலதினுசுகளான பாஷை புஸ்தகங்களும் அடியில் கண்ட தமிழ் புஸ்தகங்களும் கிடைக்கும்.

புராணங்கள், இலக்கணங்கள், இலக்கியங்கள், அந்தாதிகள், கலம்பகங்கள், வெண்பாக்கள், பிள்ளைத்தமிழ்கள், சதகங்கள், மாலைகள், வண்ணங்கள், வேதாந்தங்கள், சித்தாந்தங்கள், ஞானநூல்கள், சித்தர் ஞான நூல்கள், வைஷ்ணவ நூல்கள், யாத்திரை நூல்கள், பூஜை, சூரிய நூல்கள், தோத்திரங்கள், பதிகம் பத்துகள், பாடல்கள், கும்மி சிந்துகள், சங்கீத நூல்கள், கீர்த்தனைகள், நாடகம் விலாசங்கள், டிராமா சரித்திரங்கள், வைத்திய நூல்கள், சித்தர் வைத்தியநூல், ஜாலபுஸ்தகங்கள், மாந்திரீகபுஸ்தகங்கள் கதைபுஸ்தகங்கள் அம்மானைகள், நாவல் தினுசுகள், துலுக்கு புஸ்தகங்கள் சட்டலா-டி. புதுவருஷ பஞ்சாங்கம். புதிய டைரிகள், காலண்டர்கள், ஸ்கூல்புஸ்தகங்கள், டிராயிங் நோட்டுகள். எக்ஸர்ஸயிஸ் டி. ஸ்டூடென்ஸ் டி. பேப்பர் தினுசுகள், பென்ஸல் தினுசுகள்; பேனா தினுசுகள் பவுண்டன்பேனாக்கள் ஸ்டேஸனெரி சாமான்கள், இன்னும் பலவித பெரிய புஸ்தகங்கள் சில்லரை புஸ்தகங்களும் கிடைக்கும் வேண்டுவோர் நேரிலும் தபால்மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் மொத்தமாக வாங்குபவர்களுக்கும் விலைசரஸமாக, கொடுக்கக்கூடும் தங்கள் விலாசம் தெரிவித்தால் புஸ்தக, விலை ஜாப்தா இனமாய் அனுப்பக்கூடும்.

எமது விலாசம்

## எஸ். வேணுகோபால் நாயுடு

## புஸ்தக ஷாப்பு புதுமண்டபம் மதுரை